செப்டம்பர் 2025

திராவிட வாசிப்பு

வாசிப்பும் மீள்வாசிப்பும்

நாயக பிம்ப அரசியலின் வேர்கள்

வணக்கம்.

இந்த இதழுக்காக பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதித்தந்த தோழர்களுக்கு எங்களது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

திராவிட வாசிப்பு குறித்த உங்களது மேலான கருத்துகளை, விமர்சனங்களை எதிர்பார்க்கிறோம். கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் கருத்துகளை சொல்லுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நன்றி!

உங்கள் படைப்புகளையும், கருத்துகளையும் இந்த மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்: dravidavaasippu@gmail.com

கட்டுரைகளை திராவிட வாசிப்பு ஆன்லைன் பக்கத்திலும் வாசிக்கலாம்: https://blog.dravidiansearch.com/

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை "கிண்டிலில்" வாசிக்க: https://www.amazon.in/s?i=digital-text&rh=p_27%3ADravida%2BVaasippu&s=relevancerank&text=Dravida+Vaasippu&ref=dp_byline_sr_ebooks_1

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை "ஆன்லைனில்" வாசிக்க: https://drive.google.com/drive/folders/1-6Sk8TylSzrCfiU0BJ-_Osvh7DRFCl0z?usp=sharing

இப்படிக்கு,
திராவிட வாசிப்பு *Editorial Team:*

- (அருண் ஆஷ்லி, அசோக் குமார் ஜெ, அஷ்வினி செல்வராஜ், தினேஷ் குமார், ஜெகன் தங்கதுரை, கதிர் ஆர்.எஸ்., மதுமலர், மனிதி தெரசா, இராஜராஜன் ஆர். ஜெ, டிமோத்தி, யூசுப் பாசித், விக்னேஷ் ஆனந்த், விஜய் ஜி.எஸ், பிரபு கணேஷ்)

படித்தவர்கள் சாதியை தாங்கிப்பிடிப்பது ஏன்? - சுந்தரவாணன் பாண்டியன்
பெரியாரிய பார்வையில் நடிகர்களின் பிம்ப அரசியல் - சுந்தரவாணன் பாண்டியன்
சிலை - ராஜகுமார் செல்வராஜ்
திராவிட மாடல் அரசு - விளையாட்டு துறையில் உச்சம் பெரும் தமிழ்நாடு - வெற்றிச்செல்வன் மாணிக்கம்
Arya Maya- Version 2.0 - Mohit Palagiri
ஓட்டு திருட்டும் மக்களாட்சியை காக்கும் பணியும் - ஜெ.வெ.நவீன்

படித்தவர்கள் சாதியை தாங்கிப்பிடிப்பது ஏன்? - சுந்தரவாணன் பாண்டியன்

ஏன் கல்வி அறிவுள்ளவர்களும் சாதியச் சிந்தனையில் உழல்கின்றனர்?

இந்திய சமுதாயத்தில் சாதிய முறை என்பது மிகவும் ஆழமாக பதிந்துள்ள ஒரு சிக்கலான சமூக கட்டமைப்பு. கல்வி மனிதனுக்கு வெளிச்சம் காட்டும் மிக முக்கியக்கருவி என்றாலும், நம் நாட்டில் பலர் கல்வியறிவுடன் சாதியச் சிந்தனையையும் இணைத்து தங்கள் வாழ்வியலை வகுத்துள்ளனர். இங்கு நல்ல கல்வியறிவு இருந்தும் எதற்காக சா'தீய' மனோபவாத்தை விட்டு வெளியேற முடியாமல் இருக்கிறார்கள் என்பதையும், அதற்கு பின்னால் உள்ள காரணங்களையும் ஆராய்வோம்.

சாதியின் ஆழமான வேர்கள்

சாதியமுறை என்பது வெறும் சமூக வேறுபாடு மட்டும் அல்ல; அது ஒருவகை அடையாளமாகவும், பெருமையாகவும் பலரது மனதில் பதிந்துள்ளது. "நான் இந்தச் சாதியைச் சேர்ந்தவன்" என்பது பலருக்கு தங்கள் தனித்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு அடையாளமாக உள்ளது. இந்த ஆழமான வேர்களை வெட்டிவிடுவது நன்கு படித்தவர்களுக்கும் கூட தேவையானதாக இருக்கவில்லை. படித்தவராயினும் படிக்காதவராயினும் சாதிய படிநிலைகளில் நம்பிக்கை கொண்டவர்களாகவும், ஆண்ட பரம்பரையென எண்ணிப்பெருமை/ ஆணவம் கொள்ளும் மனிதர்களாகத்தான் இருக்கிறார்கள். கல்வி கற்றாலும், அந்த அடையாள உணர்வை விட முடியாமல் இருப்பார்கள்.

இந்திய சமூகம் பற்றி பேசும்போது, "சாதி" என்ற சொல் தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்திய சமூகத்தில் சாதி ஒரு மிகப் பெரிய சக்தியாக வேரூன்றியுள்ளது. "

சாதி முறை முதலில் தொழில்களையும், கடமைகளையும் பிரிக்கவே உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் காலப்போக்கில் அது சமூகப் பிரிவினை, உயர்வு–தாழ்வு, அநீதிகள் ஆகியவற்றுக்கு வழிவகுத்தது. இந்த பிரிவுகள் தலைமுறை தலைமுறையாக தொடர்ந்ததால், சாதி ஒரு மரத்தின் வேர் போல ஆழமாகப் பரவியது.

கல்வி மற்றும் சாதி

கல்வி வாய்ப்பு அனைவருக்கும் சமமாக வழங்கப்படாமல், குறிப்பிட்ட சாதி மக்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டதால், சமூகத்தில் சமத்துவம் சிதைந்து போனது. இன்றும் கல்வித்துறையில் சாதி அடிப்படையிலான விரிசல்கள் தென்படுகின்றன.

சாதி என்பது இந்திய சமுதாயத்தின் நீண்டகாலப் பிரச்சினை. பொதுவாக கல்வியறிவு பெறாதவர்களே சாதி வெறியை அதிகமாகக் கடைப்பிடிக்கிறார்கள் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் உண்மையில் கல்வி பெற்ற, உயர்ந்த அறிவைப் பெற்றவர்களும் சாதி வெறியில் சிக்கிக்கொள்கிறார்கள் என்பது மிகுந்த வேதனையளிக்கும் உண்மை.

கல்வியின் அடிப்படை நோக்கம் மனிதனின் எண்ணங்களை விரிவுபடுத்துவது, சமத்துவத்தை உணர்த்துவது, மனிதாபிமானத்தை வளர்த்தல் என்பவையாகும். ஆனால் கல்வியறிவு பெற்றவர்களே சாதி அடிப்படையிலான பிரிவினை, உயர்வு–தாழ்வு என்ற மனப்போக்கை விட்டு விடாமல் பின்பற்றுகிறார்கள் என்றால், கல்வியின் அர்த்தமே வீணாகிவிடுகிறது.

பலர் பட்டம் பெற்றிருக்கிறார்கள், நல்ல வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் திருமணம், சமூக உறவு, அரசியல் சார்ந்த முடிவுகள் போன்ற இடத்தில் அவர்கள் இன்னும் சாதி அடிப்படையிலேயே சிந்திக்கிறார்கள். இவர்கள் ‘‘கல்வி பெற்றவர்கள்’’ என்றாலும் ‘‘அறிவு பெற்றவர்கள்’’ அல்ல என்பது இங்கிருந்து தெளிவாகிறது.

கல்வி பெற்றவர்களின் சாதி வெறி, சாதியப்பிரிவினைகளை மேலும் வலுப்படுத்துகிறது. சாதி அடிப்படையிலான பேதங்கள் கல்வியறிவு பெற்றவர்களிடம் கூட நிலைத்திருக்கின்றன என்றால், சாதாரண மக்களிடம் அதை முற்றிலும் ஒழிக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இதனால் சமுதாய முன்னேற்றம் தாமதிக்கிறது, மனிதாபிமானம் பாதிக்கப்படுகிறது.

பழமையான மரபுகள் – குடும்பம், சுற்றம் ஆகியவை சிறு வயது முதலே சாதி பற்றிய எண்ணங்களை விதைக்கின்றன.

சுயநல எண்ணங்கள் – சமூக அந்தஸ்து, சொத்து, வருங்கால பாதுகாப்பு ஆகியவற்றைக் காரணம் காட்டி சாதியை இறுகப்பிடித்துக்கொள்கிறார்கள்.

கல்வி அறிவுடையவர்களிடம் சாதி வெறி நிலைத்திருப்பது சமுதாய வளர்ச்சிக்கு மிகப் பெரிய தடையாக உள்ளது. கல்வி பெற்றவர்கள் தான் முன்னுதாரணமாக இருந்து, சாதியை மீறி நடக்காவிட்டால், சாதி வெறியை முற்றிலும் ஒழிக்க முடியாது. கல்வியின் உண்மையான வெளிப்பாடு மனிதாபிமானம் என்பதால், ஒவ்வொருவரும் சாதியை விடுத்து மனிதனை மனிதராக மதிக்க வேண்டும். தேர்வு மதிப்பெண்களோ, பட்டங்களோ கல்வியின் அளவுகோல் அல்ல; மனிதாபிமானம் தான் உண்மையான கல்வியின் பலன் என்பதை உணர்த்த வேண்டும்.

திருமணத்தில் சாதி இன்னும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. சாதி வேறுபாடு காரணமாக காதல் திருமணங்கள் எதிர்ப்புகளை சந்திக்கின்றன. சமூகத்தில் பல இடங்களில் சாதி அடிப்படையிலான மரபுகள் இன்னும் கடுமையாக பின்பற்றப்படுகின்றன. இந்த இடத்தில் படித்தவர்கள், படிக்காதவர்கள் எனும் பேதமேயில்லை.

நம் நாட்டில் கல்வி பெரும்பாலும் "வேலை வாய்ப்பு பெறுவது" என்ற குறுகிய நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் கல்வியின் உண்மையான நோக்கம் மனிதனை சிந்திக்க வைப்பது, அவன் உள்ளத்தில் மனிதநேயத்தை வளர்ப்பது என்பதே. பலருக்கு கல்வி அறிவை அளித்தாலும், மனநிலையை மாற்றுவதில்லை. அதனால் தான் கல்வியறிவுள்ளவர்களும் சாதியக் குறுகிய எண்ணங்களில் சிக்கிக்கொள்கிறார்கள்.

சாதி முறை சமுதாயத்தில் சமத்துவத்தை குலைக்கிறது. மனிதர்களை உயர்வு–தாழ்வாகப் பிரிக்கிறது. ஒற்றுமையை அழிக்கிறது. முன்னேற்றத்தைத் தடுக்கிறது. மனிதாபிமானத்தை கேள்விக்குறியாக்குகிறது. இதெல்லாம் படித்தவர்களுக்கு தெரியாமல் இல்லை, அவர்கள் இதற்கு பழகிப்போய்விட்டார்கள் அல்லது ஆண்ட சாதி பெருமைகளில் தம்மை தொலைக்கின்றனர் அல்லது சமூக படிநிலையென சொல்லப்படதில் தான் ஒருவனுக்கு அடிமையாய் இருக்கிறோம் என்பதை கண்டுகொள்ளாமல் தனக்கு கீழ் வேறு ஒருவன் இருந்தால் போதுமென்று அவனிடத்தில் அதிகாரம் செய்து கொண்டிருக்கின்றனர்.

ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் சாதி குறித்த விருப்பம் இல்லாவிட்டாலும், குடும்பம் மற்றும் சமூகம் அவரை அதற்குள் தள்ளுகிறது. "சாதிக்கு வெளியே திருமணம் செய்தால் என்ன சொல்வார்கள்?", "நமது குலத்தின் மரபை காப்பாற்ற வேண்டும்" ‘‘நம் குடும்ப கவுரவம் என்ன ஆவது’’ போன்ற காரணங்களால் பலர் சமுதாய அழுத்தத்துக்காக பின்பற்றுகின்றனர். கல்வியறிவுள்ளவர்களும் இதிலிருந்து விடுபட முடியாமல் போகின்றனர்.

சாதி மற்றும் வேலைவாய்ப்பு

சில கிராமப்புறங்களில், மற்றும் நகரங்களின் சில வணிக வட்டாரங்களில் கூட, வேலைவாய்ப்புகள் சாதி அடிப்படையில் வழங்கப்படுகின்றன. "நம் சாதியை சேர்ந்தவர்களையே முன்னிறுத்த வேண்டும்" என்ற எண்ணம் கல்வியறிவுள்ளவர்களிடம் கூட நிலைத்து நிற்கிறது. இதனால் சமூகத்தில் சமத்துவம் நிலை கொள்ளாமல் போகிறது.

மதம் மற்றும் பாரம்பரியம்

சில மதக்கோட்பாடுகள் சாதியைக் காப்பாற்றும் விதத்தில் விளக்கப்படுகின்றன. கோவில், சடங்கு, திருவிழா போன்றவை சாதி அடிப்படையில் நடத்தப்படுவதால், கல்வியறிவுள்ளவர்களும் கூட மத பாரம்பரியத்தின் பெயரில் சாதியைக் கடைப்பிடிக்கின்றனர். நாட்டார் தெய்வ வழிபாட்டு முறைகள், காதுகுத்து போன்ற நிகழ்வுகள் எவ்வளவு படித்து என்ன வேலையில் எந்த நாட்டில் இருப்பினும் சாதிய கட்டுமானம் குலையாமல் காக்கிறது.

சாதிய அமைப்பை உருவாக்கிய பார்ப்பணியம்

மனித சமூகம் தோன்றிய காலம் முதலே மக்கள் தங்கள் தேவைகள், பணிகள், திறமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிந்து வாழ்ந்தனர். ஒருவர் விவசாயம் செய்தார், ஒருவர் போரில் ஈடுபட்டார், மற்றொருவர் வணிகத்தில் ஈடுபட்டார். இவ்வாறு தொழில் சார்ந்த பிரிவுகள் ஏற்றத்தாழ்வின்றி இயல்பாக இருந்தன. ஆனால், இந்த இயல்பான பிரிவுகளை மரபுரிமை அடிப்படையில் மாற்றி, பிறப்பின் அடிப்படையில் உயர்வு – தாழ்வு நிர்ணயிக்கும் வேரூன்றிய அமைப்பாக மாற்றியது தான் பார்ப்பணியம் உருவாக்கிய சாதி அமைப்பு ஆகும்.

திராவிட நாகரிகமான சிந்து சமவெளி நாகரிகம் உலகில் தனித்துவமான பழமையான நாகரிகங்களில் ஒன்றாகும். ஆனால் அந்த சமூகத்தின் மேன்மையை களவாடிய மிகப்பெரிய குற்றவாளி பார்ப்பண சிந்தனை தான். கல்வி, வழிபாடு, செல்வம், அரசியல் – இவை அனைத்தையும் கைப்பற்றி, சமூகத்தை அடுக்கடுக்காகப் பிரித்துத் தாழ்த்தும் பணி பார்ப்பணியத்தால் நிகழ்ந்தது

முதலில் இது தொழிலின் அடிப்படையில் இருந்தாலும், காலப்போக்கில் பார்ப்பணர்கள் தங்களின் அதிகாரத்தை நிலைநிறுத்த, ''பிறப்பு அடிப்படையில்'' உயர்வு – தாழ்வு நிர்ணயிக்கத் தொடங்கினர். இதுவே சாதி அமைப்பின் தோற்றம்.

பார்ப்பணியத்தின் முக்கியமான ஆயுதம் அறிவு.

வேதங்களைப் படிக்கவும், சொல்லவும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டது.

க்ஷத்திரியரும், வைசியரும் சில கல்வியைப் பெற முடிந்தாலும், சூத்திரர்களுக்கும், அதற்கும் கீழே உள்ள அடிமை சமூகங்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டது.

''வேதங்களை கேட்பவரின் காதில் உருகிய ஈயம் ஊற்ற வேண்டும்'' என்ற கொடூரமான சட்டங்களும் பார்ப்பணியத்தின் கீழ் நிலவின. சாதி அமைப்பின் மூலம் பார்ப்பணர்கள் வெறும் ஆன்மீக அதிகாரத்தை மட்டுமல்ல, பொருளாதார அதிகாரத்தையும் கைப்பற்றினர்.

பார்ப்பணியம் மதத்தை உபயோகித்து சாதியைக் காக்கும் யுக்திகளை உருவாக்கியது. ''சாதி என்பது கடவுள் படைத்த ஒன்று'' என்று மக்களின் மனதில் ஊற்றி, அவர்களை அடிமைகளாக வைத்தது. மத நூல்கள், புராணங்கள், கதையாடல்கள் ஆகிய அனைத்தும் சாதியை வலுப்படுத்தும் கருவிகளாக பயன்படுத்தப்பட்டன

இளைஞர்களின் பங்கு

இளைஞர்கள் தான் மாற்றத்தின் துரண்கள். இளம் தலைமுறை சாதியற்ற சிந்தனையை ஏற்றுக்கொண்டால் மட்டுமே சமூகத்தில் உண்மையான மாற்றம் வரும். கல்வியறிவுள்ள இளைஞர்கள் திருமணத்தில், வேலை வாய்ப்புகளில், சமூக உறவுகளில் சாதியை ஒதுக்கி வைக்க வேண்டும்.

கல்வி, விழிப்புணர்வு, சமத்துவம், அன்பு ஆகியவற்றின் மூலம் மட்டுமே சாதியின் வேர்களை படிப்படியாக பலவீனப்படுத்த முடியும். ஒவ்வொருவரும் சாதியை மீறி மனிதனை மனிதராக மதிக்கத் தொடங்கினால் தான், உண்மையான சமத்துவ சமுதாயத்தை உருவாக்கலாம். சமூக ஊடகம், இலக்கியம், திரைப்படங்கள் போன்றவற்றின் மூலம் சாதி வெறியின் தீமைகள் விளக்கப்பட வேண்டும்

கல்வியறிவுள்ளவர்களும் சாதியச் சிந்தனையில் ஈடுபடுவதற்கு காரணங்கள் — சமூக அழுத்தம், பாரம்பரியம், அரசியல், பொருளாதாரம் ஆகியவை. கல்வி வெறும் அறிவு வழங்குவது மட்டுமல்ல, மனித மனதை உயர்த்தி, சமத்துவ உணர்வை வளர்க்க வேண்டும். "மனிதன் சாதியால் மதிக்கப்படுவதில்லை; அவன் மனிதநேயத்தால்

மட்டுமே மதிக்கப்படுகிறான்" என்ற உண்மை அனைவரின் உள்ளத்திலும் பதிந்தால் மட்டுமே, சாதி மறைந்த சமத்துவ சமுதாயம் உருவாகும்.

மாற்றத்திற்கு தேவைப்படும் விழிப்புணர்வு

சாதியை அழிக்க வேண்டுமெனில் வெறும் கல்வி மட்டும் போதாது; மனப்போக்கையும் மாற்ற வேண்டும். குழந்தைகள் பள்ளியில் இருந்தே சமத்துவக் கற்பனைகளை கற்றுக்கொள்ள வேண்டும். பாடப்புத்தகங்களில் சாதி எதிர்ப்பு கதைகள், சிந்தனைகள் இடம் பெற வேண்டும். ஊடகம், சினிமா, இலக்கியம் ஆகியவை இந்த விழிப்புணர்வை பரப்ப வேண்டும்.

சூரசம்ஹாரம், இராமன் பிறப்பு, கிருஷ்ணன் பிறப்பு, பிள்ளையார் சதுர்த்தி, கந்தர் சஷ்டி அது, இது - என்று வருகிற பண்டிகைகள் அத்தனையையும் ஒழிக்க வேண்டும். ஏனென்றால், பார்ப்பனியமாகிய ஜாதியானது - மதமானது எந்த விதத்தில் நம்மை அடிமை கொண்டிருக்கிறது என்றால், ஆயுத பலத்தினாலோ, துப்பாக்குண்டு, பீரங்கியாலோ அல்ல. நான் இதற்கு முன் எதை எதை ஒழிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறி இருக்கிறேனோ, அவைகளால் தான் நம்மை அடிமையாக்க நேர்ந்தது

- தந்தை பெரியார் - விடுதலை - 22.02.1952

பெரியாரிய பார்வையில் நடிகர்களின் பிம்ப அரசியல் - சுந்தரவாணன் பாண்டியன்

சினிமா என்பது வெறும் பொழுதுபோக்கு கருவி மட்டும் அல்ல. அது சமூக மனப்போக்கை மாற்றும் சக்தியையும், அரசியலை வடிவமைக்கும் வலிமையையும் உடையது. தமிழ்நாட்டில் குறிப்பாக, நடிகர்களின் அரசியல் தாக்கம் அபாரமானது. நடிகர்களின் பிம்பங்கள் (image) சாதாரண மக்களின் மனதில் கடவுள் போன்ற பக்தியை உருவாக்கியுள்ளன. இந்தப் பிம்ப அரசியலை பெரியாரின் அறிவுசார் தர்க்க சிந்தனையின் அடிப்படையில் ஆராய்வது இன்றியமையாத ஒன்றாகும்.

மனித மனம் கற்பனை மற்றும் உணர்ச்சிகளில் எளிதாக பாதிக்கப்படும் தன்மை கொண்டது. நடிகர்கள் திரையில் நாயகனாகவும், நீதிக்குரல் கொடுப்பவராகவும், அடக்குமுறைக்கு எதிராக போராடுபவராகவும் காட்டப்படுகிறார்கள். இதனால், ரசிகர்களின் மனதில் அந்த நடிகரே உண்மையான வீரர் எனும் நம்பிக்கை உருவாகிறது.

இந்த உளவியல் நிலையை அரசியல்வாதிகளாக மாறிய நடிகர்கள் மிகச் சாமர்த்தியமாக பயன்படுத்திக் கொண்டனர். "திரை பிம்பம் = நிஜ வாழ்வு" என்ற கலப்பை மக்கள் மனதில் வலுப்படுத்தியதால், அரசியல் அறிவு வளராமல் உணர்ச்சி அரசியல் அதிகரித்தது. பெரியாரின் பார்வையில் இது மிகவும் ஆபத்தானது. எந்த ஒரு நிகழ்வையும், சூழழையும் உணர்வுப்பூர்வமாக அணுகாமல் அறிவுப்பூர்வமாக அணுகவேண்டும் என்பதே பெரியாரிய சிந்தனையின் வேர். நடிகர்களின் அரசியல் இதற்கு நேர் எதிரானது.

நாயக பிம்ப அரசியலின் வேர்கள்

1930களிலிருந்து தமிழ் சினிமாவில் கதாநாயக பாத்திரங்கள் வலிமை, வீரியம், தியாகம் போன்ற பண்புகளுடன் காட்சிப்படுத்தப்பட்டன. மக்களின் வாழ்வில் கற்பனையும் நிஜமும் கலந்து காணப்பட்டது. திரைப்படங்களில் பாடல்கள், உரைகள், சமூக நீதி கோஷங்கள் அரசியலுக்கு வழிகாட்டியாக மாறின. இதன் மூலமே "நாயக பிம்ப அரசியல்" வலுவடைந்தது.

பெரியாரின் சிந்தனை மற்றும் விமர்சனப் பார்வை

பெரியார் சிந்தனையின் மையக் கருத்து – அறிவு, தர்க்கம், சமத்துவம், சாதி ஒழிப்பு, மத ஒழிப்பு. அவரின் பார்வையில், மக்களின் அறிவை மழுங்கடித்து, உண்மையை மறைக்கும் எந்த வடிவமும் எதிர்க்கப்பட வேண்டியதாகும்.

நடிகர்கள் திரையில் "இறைவனின் தூதர்", "ரட்சகர்", "மக்களின் நாயகன்" என்று காட்டப்பட்டாலும், அது நிஜ வாழ்வின் சிக்கல்களை மறைக்கும் கற்பனை. பெரியார் வலியுறுத்திய "அறிவுசார் சிந்தனை" மக்கள் இடையே வலுப்படவில்லை என்றால், அவர்கள் நடிகர்களின் பிம்பங்களை உண்மையென நம்பி அரசியல் முடிவுகள் எடுப்பார்கள்.

பெரியார் வலியுறுத்தியது – "அறிவே மனிதனை விடுதலை பெறச்செய்யும் கருவி". ஆனால் நடிகர்களின் பிம்ப அரசியல், அறிவை மறைத்து, உணர்ச்சிகளை பயன்படுத்தி மக்களை ஈர்க்கும் தந்திரமாகவே இருந்தது.

நாயக பிம்ப அரசியலின் விளைவுகள்

1. அறிவுசார் சிந்தனையின் வறட்சி – மக்கள் கேள்வி கேட்காமல், ரசிகப் பாசத்தில் அடிமைப்படுதல்.

2. அரசியல் தீர்மானங்களில் தவறுகள் – கற்பனை கதாபாத்திரத்தின் குணங்களின் அடிப்படையில் வாக்குகள் அளித்தல்.

3. சமூக சீர்திருத்தங்களுக்கு தடைகள் – அறிவு, புரட்சி, தர்க்கம், சமத்துவம், சமூகநீதி ஆகியவை பின்தள்ளப்படுதல்.

4. மக்களின் உணர்ச்சி அரசியல் – தேவையான நலன்களை விட உணர்ச்சி சார்ந்த வாக்குப்பதிவு.

பெரியாரிய எதிர்வினைகள்

பெரியார் சினிமாவை சமூகக் கல்விக்குப் பயன்படுத்த வேண்டும் என்றார். ஆனால் நடிகர்கள் அதை சுயநலத்திற்கும், புகழுக்கும் பயன்படுத்துவதை அவர் கடுமையாக விமர்சித்தார். "நடிகர்களின் நாயக பிம்ப அரசியல், மக்களை அடிமைப்படுத்தும் கருவியாகும்" என்ற விமர்சனத்தை அவர் பல சந்தர்ப்பங்களில் முன்வைத்தார்.

அவரின் பார்வையில், மக்கள் நடிகர்களின் நாயக பிம்பத்தை விடுத்து, கொள்கை, செயல் திட்டம், பகுத்தறியும் சிந்தனை அடிப்படையில் தலைவர்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

இன்றைய தமிழ்நாட்டிலும் நடிகர்களின் நாயக பிம்ப அரசியல் தொடர்கிறது. புதிய தலைமுறை நடிகர்கள் அரசியலுக்கு வரும்போது, அவர்களின் ரசிகர்களின் கூட்டமே அடிப்படையான முதன்மை சக்தியாகிறது. ஆனால் பெரியார் வலியுறுத்தியபடி, சமூக முன்னேற்றத்திற்கு "அறிவு, சமீகநீதி, சமத்துவம்" மட்டுமே அடிப்படை.

பிம்ப அரசியலில் ரசிகர் மன்றங்களின் பங்கு

நடிகர்கள் அரசியலுக்கு வருவதற்கு முன்னரே ரசிகர் மன்றங்கள் வலுவான அடிப்படையாக செயல்பட்டன.

ரசிகர் மன்றங்கள்:

சமூக நல சேவைகள்,
இரத்த தான முகாம்கள்,
ஏழைகளுக்கான உதவிகள்,

திருவிழா கொண்டாட்டங்கள் போன்றவற்றின் மூலம், ஒரு அரசியல் அமைப்புக்கு இணையான வலையமைப்பை உருவாக்கின.

இதுவே பின்னாளில் நேரடியாக அரசியல் வாக்கு வங்கி *(vote bank)* ஆக மாறியது. பெரியாரின் தர்க்க சிந்தனையில், "அறிவு வளர்ப்பது தான் முதன்மை" என்றார். ஆனால் ரசிகர் மன்றங்கள், அறிவை வளர்ப்பதற்குப் பதிலாக நடிகரின் பிம்பத்தை வலுப்படுத்தும் கருவியாக செயல்படுகின்றன.

பெண்கள் மற்றும் பிம்ப அரசியல்

நடிகர்களின் அரசியலில் பெண்களின் பங்கு தனித்துவமானது. ஜெயலலிதா ஒரு நடிகையாகத் துவங்கி, "அம்மா" என்ற பிம்பத்தின் அடிப்படையில் அரசியலை கைப்பற்றினார். அவர் உருவாக்கிய அந்த பிம்பம் – தாய்மை, பாதுகாப்பு, இரும்பு பெண்மணி எனும் கட்டமைக்கப்பட்ட பிம்பம் ஆகியவற்றை ஒரே நேரத்தில் வெளிப்படுத்தியது.

பெரியார் பார்வையில் இது "பெரியாரிய பெண் விடுதலை சிந்தனைக்கு முரணானது" என்று சொல்லலாம். ஏனெனில் பெண்கள் சமூகத்தில் சம உரிமையோடு முன்னேற வேண்டும் என்ற நிலையிலிருந்து, மீண்டும் அவர்கள் "அம்மா" என்ற குறிக்கோளின் அடிமையாக்கப்பட்டனர். இது பெண்கள் அரசியலை சுயநல பிம்பமாக மட்டுமே காட்டும் அபாயத்தை ஏற்படுத்தியது. அவர் சுட்டிக்காட்டியபடி, மக்கள் அறிவை வளர்த்தால் மட்டுமே பிம்ப அரசியலை மீறி உண்மையான ஜனநாயகம் சாத்தியமாகும். ஜெயலலிதா அவர்கள் பெரியார் மீது பெருமதிப்பு வைத்திருப்பதாக அவ்வப்போது கூறிக்கொண்டே இருந்தபோதும் பெரியாரிய சிந்தனைகளுக்கு எதிராகவே இருந்தார்.

பிம்ப அரசியலின் பொருளாதார விளைவுகள்

நடிகர்கள் அரசியலில் வந்தவுடன், திரைப்பட உலகமும், அரசியல் உலகமும் ஒன்றோடொன்று கலந்தன. ஒரு திரைப்படம் வெளியாகும் போதே அது அரசியல் பிரசாரமாக மாறியது. நடிகரின் காட்சிகள், பாடல்கள், வசனங்கள் – அனைத்தும் அரசியல் சின்னங்களாக பயன்படுத்தப்பட்டன.

இதன் மூலம்:

1. திரைப்படத் தொழிலுக்கு அரசியல் ஆதரவு கிடைத்தது
2. மக்களின் வாக்குகளை கவரும் வணிகத் திட்டங்கள் உருவானது
3. அரசியல் மற்றும் சினிமா இடையே பணப் பரிமாற்றங்கள் அதிகரித்தன

பெரியார் வலியுறுத்தியது – "சமூக வளம் அறிவியல் முன்னேற்றத்தில்தான், கற்பனையான வசீகரமான விளம்பரங்களில் அல்ல." எனவே பொருளாதாரத்திலும் நாயக பிம்ப அரசியல் ஒரு தடையாகவே பார்க்கப்பட்டது.

எதிர்காலத்தில் பிம்ப அரசியலின் நிலை

இன்றைய காலகட்டத்தில், சமூக ஊடகங்கள் *(social media)* நாயக பிம்ப அரசியலை மேலும் வலுப்படுத்துகின்றன. நடிகர்கள் இன்ஸ்டாகிராம், ட்விட்டர் போன்ற தளங்களில் ரசிகர்களைச் சேர்த்து, அரசியலுக்கு வலுவான அடிப்படை அமைக்கின்றனர்.

ஆனால் இன்றைய இளைஞர்கள் பெரியாரின் சிந்தனையைப் படித்துப் புரிந்து கொண்டால், பிம்ப அரசியலின் பாதிப்பை குறைக்க முடியும். மக்கள் அறிவியல் சிந்தனையோடு கேள்வி கேட்கத் துவங்கினால், உண்மையான கொள்கை சார்ந்த அரசியல் வளர்ச்சி சாத்தியமாகும்.

நடிகர்களின் பிம்ப அரசியல், மக்களை கற்பனையில் கட்டிப்போட்டு வைத்த ஒரு வடிவம். சமூக முன்னேற்றம், அறிவியல் சிந்தனை, சமத்துவம் ஆகியவை வளர வேண்டுமெனில் மக்கள் இந்த பிம்ப அரசியலை மீறி சிந்திக்க வேண்டும்.

நிஜ வாழ்வில் தலைவர்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள், அவர்களின் கொள்கைகள் என்ன, அவர்கள் சமூக நீதி குறித்த பங்களிப்பு என்ன – இவை மட்டுமே ஒரு அரசியல்வாதியை மதிப்பீடு செய்யும் அளவுகோலாக இருக்க வேண்டும். அப்போது தான் தலைவர் பெரியாரின் கனவு வெற்றி பெறும்.

சிலை - ராஜகுமார் செல்வராஜ்

அந்த கோயிலுக்கு உள்ளேயும்
வெளியேயும் சிலை இருக்கின்றது
ஒன்று எல்லோருக்கும் அனுமதி இல்லா
ஒளிகுறைந்த இருண்ட அறையின்
நடுவே மற்றொன்று
குடையுமின்றி கோட்டமுமின்றி
யாவரும் கடக்கும் பொதுவெளியில்
கருமைதான் இரண்டின் வண்ணமும்
ஆனால் ஒன்று ஆனந்த மயக்கத்தில் மற்றொன்று
எழுதுகோல் கொண்டு சிந்தனை
செயலாக்கத்தில் மயக்க சிலைக்கு
தூக்கம் கலையாதிருக்க பக்தனுக்கும்
சிலைக்குமே புரியாத பாஷை
ஓதப்படும் கூடுதல் கையூட்டு கொடுத்தால்
அதில் உன் பெயரும் சேர்க்கப்படும்
தட்டைத் தவிர்த்து காணிக்கைகள்
உண்டியல்களுக்கு சென்றால் அதுவுமில்லை
வெளியே எந்த கட்டுப்பாடுமில்லை காலணிகளை, ஆடைகளை
கழட்டவோ பாதுகாக்கவோ அவசியமில்லை சிறப்புக்கட்டணம்,
சிபாரிசுக் கடிதம் நீண்ட வரிசைகள் எதுவுமில்லை
பரந்த வான் போல
யாவரும் வணங்கலாம், படிக்கலாம்
ஏற்கலாம், விமர்சிக்கலாம்
வண்ணம் கூட பூசலாம்
உள்ளே
நீ அறிவை தொலைத்து
செய்யும் வேண்டுதல்களை வெளியே
நீ ஒரு போதும்
செய்யமாட்டாய் ஏனெனில்
நானே படைத்தேன்
என்கிறது உட்புறமிருக்கும் சயன சிலை
நானே
சொன்னாலும் எதையும் செய்யாதே
உன் அறிவு பெரிது
அதை நம்பு
என்கிறது கிழவன் சிலை.

- ராஜகுமார் செல்வராஜ்

திராவிட மாடல் அரசு - விளையாட்டு துறையில் உச்சம் பெரும் தமிழ்நாடு - வெற்றிச்செல்வன் மாணிக்கம்

அடிமட்ட விளையாட்டு மேம்பாட்டிற்கான உள்ளடக்கிய முயற்சி கிராமப்புறம், நகர்ப்புறம் என்று அனைவரையும் உள்ளடக்கிய மாணவர்களின் விளையாட்டுத் திறமையை வளர்ப்பதற்கான ஒரு முக்கிய முயற்சியாக, தமிழ்நாடு அரசு பிப்ரவரி 7, 2024 அன்று திருச்சியில் கலைஞர் விளையாட்டுப் பொருள் (Kalaignar Sports Kit) கருவித் திட்டத்தைத் தொடங்கியது. தமிழ்நாட்டின் மதிப்பிற்குரிய அரசியல் மற்றும் கலாச்சாரச் சின்னமான மறைந்த கலைஞர் கருணாநிதியின் நினைவாகப் பெயரிடப்பட்ட இந்தத் திட்டம், மாநிலம் முழுவதும் உள்ள 12,600 கிராம பஞ்சாயத்துகளிலும் தகுதியுள்ள வீரர்களுக்கு இலவச, விரிவான விளையாட்டுப் பொருள்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், "விளையாட்டுத் துறையில் சாதனையாளர்கள் நகர்ப்புற மையங்கள் அல்லது வசதியான குடும்பங்களில் இருந்து மட்டுமல்ல, ஒவ்வொரு மூலையிலிருந்தும் சமூகத்திலிருந்தும், குறிப்பாக கிராமப்புறங்களிலிருந்தும் வெளிவர வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. கிரிக்கெட், கைப்பந்து, கால்பந்து, பூப்பந்து, சிலம்பம், கபடி, சதுரங்கம் மற்றும் பல விளையாட்டுகளை ஆதரிக்கும் 33 அத்தியாவசிய விளையாட்டுப் பொருட்கள் இந்தப் பெட்டிகளில் உள்ளன. இந்த முயற்சி வழக்கமான பயிற்சி மற்றும் போட்டி வெற்றிக்குத் தேவையான கருவிகளுடன் வீரர்களைச் சித்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது" என்று இந்த திட்டத்தின் நோக்கத்தையும், இந்த திராவிட மாடல் அரசின் குறிக்கோளையும் எடுத்துரைத்தார்.

துணை முதல்வர் உதயநிதி அவர்கள் விளையாட்டு கருவிகளை வழங்குகிறார் நிதிச் சுமையைக் குறைத்தல் மற்றும் பங்கேற்பை அதிகரித்தல் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் விளையாட்டுத்

திட்டங்கள் விளையாட்டு வீரர்கள் மீதான நிதிச் சுமையைக் கணிசமாகக் குறைத்துள்ளன, அதே நேரத்தில் பங்கேற்பை அதிகரித்துள்ளன:

- இலவச விளையாட்டு கருவிகள்: கலைஞர் விளையாட்டு கருவித் திட்டம் கிராமப்புற வீரர்களுக்கு இலவச உபகரணங்களை வழங்குகிறது, இது விலையுயர்ந்த உபகரணங்களின் தடையை நீக்குகிறது.
- ரொக்க ஊக்கத்தொகை: பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி மற்றும் போட்டி தொடர்பான செலவுகளை ஈடுகட்ட ரூ.142 கோடிக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது.
- அடிப்படைத் திட்டங்கள்: முதலமைச்சர் கோப்பை போன்ற போட்டிகள் ஆண்டுதோறும் 11.5 லட்சத்திற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களை ஈர்க்கின்றன,
- உள்கட்டமைப்பு மேம்பாடு: மாவட்ட அளவில் புதிய அரங்கங்கள் மற்றும் உடற்பயிற்சி மையங்கள் மலிவு விலையில் பயிற்சி இடங்களை வழங்குகின்றன.
- உள்ளடக்கிய கொள்கைகள்: பெண்கள், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் மற்றும் பல்வேறு சமூகங்களுக்கான ஆதரவு பங்கேற்பை விரிவுபடுத்துகிறது.

இந்த முயற்சிகள் கூட்டாக நுழைவதற்கான தடைகளைக் குறைத்து, ஒரு பெரிய, மிகவும் மாறுபட்ட விளையாட்டு சமூகத்தை வளர்க்கின்றன.

பெண்கள் மற்றும் பாலின உள்ளடக்கம்

சமூக நீதி மற்றும் சமத்துவம் மீதான திராவிட மாதிரியின் மாடலின் குறிக்கோளுக்கு ஏற்ப, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையிலான விளையாட்டு துறை, விளையாட்டுகளில் பெண்களை கணிசமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

- கண்ணகி நகர் கபடி கிளப் போன்ற சமூகத்தால் இயக்கப்படும் கிளப்புகள், பெண்கள் கற்றுக்கொள்ளவும், போட்டியிடவும், பாரம்பரியமாக விளையாட்டுகளுடன் தொடர்புடைய பாலின பிற்போக்குத்தனத்தை *(Gender Bias)* உடைக்கவும் பாதுகாப்பான மற்றும் ஊக்கமளிக்கும் இடங்களை வழங்குகின்றன.

- இந்த முயற்சிகள் விளையாட்டுப் பயிற்சியை வாழ்க்கைத் திறன்கள், கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியுடன் கலப்பதில் கவனம் செலுத்துகின்றன, விளையாட்டுத் துறையைத் தாண்டி இளம் பெண்களை மேம்படுத்துகின்றன.

- விளையாட்டு வசதிகள், பயிற்சி, உதவித்தொகைகள் மற்றும் போட்டிகள் குறிப்பாக பெண்கள் மற்றும் பெண்களுக்கு ஏற்றவாறு கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் அரசாங்கம் பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கிறது.

- இந்த முயற்சிகள் சமூக-கலாச்சார தடைகளைக் குறைத்து, பெண் பங்கேற்பை அதிகரித்து, எதிர்கால சந்ததியினரை ஊக்குவிக்கும் முன்மாதிரிகளை உருவாக்குகின்றன.

2020 முதல் தமிழ்நாட்டின் பதக்க எண்ணிக்கை

இந்தத் திட்டங்களின் நேர்மறையான தாக்கம், தேசிய நிகழ்வுகளில் தமிழ்நாட்டின் உயர்ந்து வரும் செயல்திறனில் பிரதிபலிக்கிறது:

ஆண்டு	நிகழ்வு	தங்கப் பதக்கங்கள்	வெள்ளிப் பதக்கங்கள்	வெண்கலப் பதக்கங்கள்	மொத்த பதக்கங்கள்
2020	கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்	22	32	22	76
2023	கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்	38	21	39	98
2024	கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்	15	21	29	65
2025	தேசிய விளையாட்டுப் போட்டிகள்	26	31	35	92

திராவிட மாடல் அரசின் தொடர் முயற்சியின் காரணமாக, தேசிய அளவில், பதங்க்கங்கள் பட்டியியலில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னேறுகிறது.

வளர்ந்து வரும் வீரர் பங்கேற்பு: 2015 முதல் 2025 வரை

தமிழ்நாட்டில் விளையாட்டுகளில் பங்கேற்பாளர் பதிவுகள் 2015 முதல் 2025 வரை குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்துள்ளன, திட்டங்கள் மற்றும் விரிவாக்கப்பட்ட வாய்ப்புகள் இதற்கு உத்வேகத்தை அளித்துள்ளன:

- 2024 ஆம் ஆண்டில் முதலமைச்சர் கோப்பைப் போட்டிகளுக்கு 11.5 லட்சத்திற்கும் அதிகமான வீரர்கள் பதிவு செய்தனர், இது 2015 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகும்.
- அதிகரித்த உள்கட்டமைப்பு மற்றும் பயிற்சியின் ஆதரவுடன், கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் பாரம்பரிய மற்றும் நவீன ஒலிம்பிக் மற்றும் ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுகளில் பங்கேற்பு பரவியுள்ளது.

2020 முதல் சர்வதேச விளையாட்டு பங்கேற்பு அதிகரிப்பு

2020 ஆம் ஆண்டு முதல் சர்வதேச விளையாட்டுகளில் தமிழ்நாட்டின் பங்கு கணிசமாக வளர்ந்துள்ளது, இதில் அடங்கும்:

- சென்னையில் 44வது FIDE செஸ் ஒலிம்பியாட் போன்ற உயர்மட்ட சர்வதேச நிகழ்வுகளை நடத்துதல், உள்ளூர் விளையாட்டு வீரர்களின் உலகளாவிய போட்டி வெளிப்பாட்டை அதிகரித்தல்.

- பாரிஸ் 2024, லாஸ் ஏஞ்சல்ஸ் 2028 மற்றும் பிரிஸ்பேன் 2032 ஆகிய ஆண்டுகளில் ஒலிம்பிக் வெற்றியை இலக்காகக் கொண்டு, அர்ப்பணிப்புள்ள சர்வதேச பயிற்சியாளர்கள் மற்றும் வளங்களுடன், சிறப்பு திட்டங்களை (SPV) உருவாக்குதல்,

- பயிற்சி தரத்தை உயர்த்த தடகளம், நீச்சல், ஹாக்கி மற்றும் டென்னிஸ் போன்ற துறைகளில் வெளிநாட்டு பயிற்சியாளர்களை நியமித்தல்.

- உயர்மட்ட விளையாட்டு வீரர்களின் வளர்ச்சியை ஆதரிப்பதற்காக அரங்கங்கள் மற்றும் விளையாட்டு அறிவியல் வசதிகள் உள்ளிட்ட உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு உள்கட்டமைப்பை நிறுவுதல்.

- தமிழக விளையாட்டு வீரர்கள் சர்வதேச அளவில் போட்டியிடுவதற்கான பாதைகளை மேம்படுத்துதல், அவர்களின் உலகளாவிய போட்டித்தன்மையை அதிகரித்தல்.

இந்த முயற்சிகள் விளையாட்டுத் துறையில் தேசிய அளவில் முன்னணியில் இருக்கும் தமிழகத்தின் நிலையை வலுப்படுத்தியுள்ளன, மேலும் விளையாட்டு வீரர்கள் மதிப்புமிக்க சர்வதேச அனுபவத்தையும் வெற்றியையும் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன் (TNCF)

தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன் (TNCF) என்பது குடிமக்கள், நிறுவனங்கள் மற்றும் தொழில்களுடன் கூட்டு சேர்ந்து மாநிலத்தில் விளையாட்டுகளைப் புதுப்பித்து மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட ஒரு கூட்டு முயற்சியாகும். விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், விளையாட்டு வீரர்களை ஆதரிப்பதற்கும், விளையாட்டு நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதற்கும் நிறுவனங்களிடமிருந்து பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிதியைத் திரட்டுவதன் மூலம் தமிழ்நாட்டின் விளையாட்டு கலாச்சாரத்தை மறுகற்பனை செய்து, புத்துயிர் பெறச் செய்து, புத்துயிர் பெறுவதே இதன் தொலைநோக்குப் பார்வையாகும்.

உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (டிஎன்சிஎஃப்) திறப்பு விழா.

TNCF இன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு வசதிகளை மேம்படுத்தவும், விளையாட்டு வீரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் சமூக பொறுப்புணர்வு நிதியைத் திரட்டுதல்.

- குறிப்பாக கிராமப்புற மற்றும் விளிம்புநிலை சமூகங்களிலிருந்து திறமைகளை அடையாளம் காண்பது, வளர்ப்பது மற்றும் ஆதரிப்பதில் கவனம் செலுத்துதல்.

- அனைத்து விளையாட்டுகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் மாவட்டங்களை நியாயமாகவும் சமமாகவும் ஆதரித்தல்.

- விளையாட்டு நிகழ்வுகளுக்கு நிதியுதவி செய்யவும், விளையாட்டு வீரர்களுக்கு நிதியளிக்கவும், விளையாட்டு மூலம் சமூக நலன்களை ஊக்குவிக்கவும் பெருநிறுவனங்களை அனுமதித்தல்.

- தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை மற்றும் சிறந்த திறமையாளர்களுக்கான உயர்நிலை உதவித்தொகை போன்ற முயற்சிகளை எளிதாக்குதல்.

- முழுமையான விளையாட்டு மேம்பாட்டிற்காக கூட்டாண்மைகளையும் நிதிகளையும் திறம்பட வழிநடத்த பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாகச் செயல்படுதல்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆதரவுடன் தொடங்கப்பட்டு , மகேந்திர சிங் தோனி போன்ற விளையாட்டு நட்சத்திரங்களால் அங்கீகரிக்கப்பட்ட TNCF, தமிழ்நாட்டில் நிலையான மற்றும் உள்ளடக்கிய விளையாட்டு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியாகும்.

குறைவான மத்திய நிதியுதவியுடன் வெற்றியை அடைதல் குறிப்பிடத்தக்க வகையில், குஜராத்தை விட மத்திய அரசிடமிருந்து கணிசமாகக் குறைவான நிதியைப் பெற்ற போதிலும் தமிழ்நாடு இந்த விளையாட்டு வெற்றிகளைப் பெற்றது. 2017 ஆம் ஆண்டு கேலோ இந்தியா திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, விளையாட்டு உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு தமிழ்நாட்டிற்கு சுமார் ₹ 29.5 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் குஜராத் ஐந்து திட்டங்களுக்கு ₹ 606 கோடிக்கும் அதிகமாகவும், உத்தரபிரதேசம் 30 திட்டங்களுக்கு ₹ 500 கோடியாகவும் பெற்றுள்ளது.

2024–25 ஆம் ஆண்டிற்கான ₹ 120 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான செயற்கை தடங்கள், உட்புற மைதானங்கள் மற்றும் ஹாக்கி மைதானங்கள் போன்ற முக்கிய உள்கட்டமைப்புகளுக்கான தமிழ்நாட்டின் பல திட்டங்கள் நிலுவையில் உள்ளன அல்லது மத்திய அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்த

ஏற்றத்தாழ்வு இருந்தபோதிலும், தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர்கள் பதக்க எண்ணிக்கையிலும், சிறந்த போட்டிகளில் தடகள பிரதிநிதித்துவத்திலும் தொடர்ந்து மற்ற மாநிலங்களை விட சிறப்பாக செயல்பட்டுள்ளனர், இதில் 13 வீரர்களை பாரிஸ் ஒலிம்பிக்கிற்கு அனுப்புவதும் அடங்கும், இது எந்த இந்திய மாநிலத்திற்கும் இல்லாத அதிகபட்சமாகும்.

இந்த வெற்றி தமிழ்நாட்டின் கிடைக்கக்கூடிய வளங்களை திறம்பட பயன்படுத்துதல், கலைஞர் விளையாட்டு கருவித் திட்டம் போன்ற வலுவான திட்டங்கள், பயனுள்ள பயிற்சி, வலுவான விளையாட்டு கலாச்சாரம் மற்றும் நிர்வாக அர்ப்பணிப்பு ஆகியவற்றிலிருந்து வருகிறது. குறைந்த நிதி இருந்தபோதிலும், ஏராளமான விளையாட்டுத் துறைகள் மற்றும் மாவட்டங்களில் பரந்த பங்கேற்பு மாநிலத்தின் சாதனைகளுக்கு மேலும் பங்களிக்கிறது.

மைதானத்திலிருந்து குரல்கள்: பதக்கம் வென்றவர்களின் சான்றுகள்

இந்தத் திட்டம் தங்கள் விளையாட்டுப் பயணத்தை எவ்வாறு மாற்றியுள்ளது என்பதை பதக்கம் வென்றவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

"இலவச விளையாட்டுப் பொருட்கள் எங்கள் பயிற்சிக்கு பெரும் ஆதரவாக இருந்து வருகின்றன. இது நிதிச் சுமைகளைக் குறைத்து, உயர் மட்டங்களில் போட்டியிட எங்களுக்கு அனுமதித்தது," என்று ஒரு தடகள வீரர் பகிர்ந்து கொண்டார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், "சாதனையாளர்கள் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் கிராமத்திலிருந்தும் வர வேண்டும், விளையாட்டுத் திறமைக்கு எல்லைகள் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

உடல் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்துதல்

பதக்கங்கள் மற்றும் பட்டங்களைத் தாண்டி, இந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் சிறந்த உடல் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் வளர்க்கிறது. விளையாட்டுகளுக்கான அணுகலை எளிதாக்குவதன் மூலம், இளைஞர்களிடையே சகிப்புத்தன்மை, வலிமை மற்றும் மன உறுதியை ஊக்குவிக்கிறது. ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையங்கள் போன்ற வசதிகள் தடகள மறுவாழ்வு மற்றும் அறிவியல் பயிற்சியை மேலும் ஆதரிக்கின்றன, நீண்டகால திறன் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துகின்றன.

திராவிட மாடல் அரசில் உலக விளையாட்டு மையமாக உருவெடுக்கும் சென்னை

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் திட்டங்கள் சென்னையை ஒரு வளர்ந்து வரும் விளையாட்டு மையமாக *(Emerging Global Sports Hub)* மாற்றியுள்ளன, சம வாய்ப்பு, சமூக நீதி மற்றும் முழுமையான வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கும் திராவிட ஆட்சி மாதிரியுடன் ஆழமாக இணைந்துள்ளன.

- சென்னையில் விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாடுகளான ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம், வேளச்சேரி நீர் விளையாட்டு வளாகம், மொகப்பேர் விளையாட்டு வளாகம் மற்றும்

ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் ஆகியவை தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் பயிற்சிக்கான மையமாக நகரத்தை நிறுவியுள்ளன.

- உலகத்தரம் வாய்ந்த அரங்கங்கள், ஒலிம்பிக் அளவிலான நீச்சல் குளங்கள், விளையாட்டு அறிவியல் மையங்கள், விடுதிகள் மற்றும் கல்விக்கூடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு உலகளாவிய விளையாட்டு நகரத்தின் தொடர்ச்சியான வளர்ச்சி, திறமைகளை வளர்க்கும் மற்றும் மார்க்யூ உலகளாவிய நிகழ்வுகளை ஈர்க்கும் ஒரு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த முற்போக்கான விளையாட்டுப் பார்வை, அனைத்து சமூகங்களிலும் பொது நலனிலும் இளைஞர் மேம்பாட்டிலும் முதலீடு செய்வதை உள்ளடக்கிய வளர்ச்சி என்ற திராவிடக் கொள்கையை பிரதிபலிக்கிறது.

- துணை முதல்வர் உதயநிதியின் கூற்றுப்படி , திராவிட மாதிரி கல்வி மற்றும் விளையாட்டை வளர்ச்சியின் தூண்களாக சமநிலைப்படுத்துகிறது, விளையாட்டு மூலம் தொழில் வளர்ச்சியை ஆதரிக்கிறது, அதே நேரத்தில் சாதி அல்லது பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாமல் ஒற்றுமை மற்றும் வாய்ப்பை வளர்க்கிறது.

- சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட பிரச்சனனை காரணமாக மணிப்பூரில் பயிற்ச்சி மேற்கொள்ள முடியாத நிலையில், மணிப்பூர் விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்க தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அழைப்பு விடுத்தார். மணிப்பூரைச் சேர்ந்த இரண்டு பயிற்சியாளர்களுடன் 15 வாள்வீச்சு விளையாட்டு வீரர்கள் (10 சிறுவர்கள் மற்றும் 5 பெண்கள்) ஆகஸ்ட் 2023 சென்னைக்கு வந்தனர். விளையாட்டு வீரர்கள் சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு உட்புற விளையாட்டு அரங்கில் பயிற்சி பெற்றனர், நல்ல பயிற்சி மற்றும் வசதிகளைப் பெற்றுள்ளனர்.

- விளையாட்டு மையமாக சென்னையின் எழுச்சி, விளையாட்டு அணுகலை ஜனநாயகப்படுத்துதல், உயர்மட்ட வசதிகளை வழங்குதல் மற்றும் வெகுஜன பங்கேற்பை ஊக்குவிப்பதன் மூலம் இந்த தத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது, இது மாதிரியின் சம வாய்ப்பு மற்றும் சமூக மேம்பாட்டில் கவனம் செலுத்துவதை பிரதிபலிக்கிறது.

செம்மஞ்சேரியில் முன்மொழியப்பட்ட உலகளாவிய விளையாட்டு நகரம் .

விளையாட்டு துறையை முன்னேற்றட்டும் திராவிட மாடல் அரசு

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையிலான கலைஞர் விளையாட்டுப் கருவிகள் திட்டம் மற்றும் தொடர்புடைய விளையாட்டு மேம்பாட்டு முயற்சிகள் தமிழ்நாட்டின் விளையாட்டு பங்களிப்பை மாற்றியமைத்து, உயர் மட்ட சாதனை ஆகியவற்றை செய்ய தூண்டியுள்ளன. இந்த முயற்சிகள்

விளையாட்டுகளை அனைவரும் அணுகக்கூடியதாக மாற்றியுள்ளன, கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் இருந்து திறமைகளை வளர்த்துள்ளன, மேலும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் தமிழ்நாட்டின் அந்தஸ்தை உயர்த்தியுள்ளன.

விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், விளையாட்டு வீரர்களை ஊக்குவித்தல் மற்றும் இளைஞர் நலனை மேம்படுத்துவதில் அவரது தொலைநோக்குத் தலைமையும் அர்ப்பணிப்பும் மிக முக்கியமானவை. அவரது தலைமையின் கீழ், தமிழ்நாடு விளையாட்டு வசதிகள் மற்றும் திட்டங்களில் கணிசமாக முதலீடு செய்து, விளையாட்டு வீரர் மேம்பாட்டிற்கான துடிப்பான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு முதலவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்க்ளின் திராவிட மாடல் அரசுக்கு பக்க பலமாக , துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமை, தமிழ்நாட்டை விளையாட்டு சக்தியாக மாற்றியுள்ளது, தலைமுறைகளுக்கு உத்வேகம் அளித்து, விளையாட்டில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் சாம்பியன்களை வளர்ப்பதன் மூலம் கலைஞர் கருணாநிதியின் பாரம்பரியத்தை மதிக்கிறது.

குறிப்புகள்.

1. https://madrasmusings.com/vol-34-no-19/from-strife-to-strength-how-sports-transformed-kannagi-nagar-into-a-hub-of-hope-and-empowerment/
2. https://cms.tn.gov.in/cms_migraated/document/docfiles/ywsd_e_pn_2025_26.pdf
3. https://sairam.edu.in/women-empowerment-cell/
4. https://www.govtschemes.in/tamil-nadu-kalaignar-sports-kit-scheme
5. https://timesofindia.indiatimes.com/city/chennai/udhayanidhi-stalin-says-dmks-dravidian-model-of-governance-leading-the-nation/articleshow/108825830.cms
6. https://timesofindia.indiatimes.com/city/chennai/dravidian-algorithm-leads-people-of-tamil-nadu-udhayanidhi/articleshow/111332196.cms
7. https://www.tnsocialwelfare.tn.gov.in/website-345/sites/default/files/2024-06/Tamil_Nadu_State_Policy_for_Women_2024_(English)_0.pdf
8. https://www.wetheleader.org/key-focus-area-women-empowerment.html
9. https://www.annauniv.edu/WomenEmpCentre/program.php
10. https://mybharat.gov.in/pages/event_detail?event_name=பெண்கள்+அதிகாரமளிப்பு மையம்-மாவட்டம்&key=908109731908
11. https://www.instagram.com/p/C2OZMuwyjSk/ ட்விட்டர்

12. https://tnchampions.sdat.in/initiatives:-

Arya Maya- Version 2.0 - Mohit Palagiri

As an eternal student of Arignar Annadurai, I would like to take the liberty of continuing his work Arya Mayai in a 21st-century context through this article. I am not an intellectual like Anna, but I am expressing my anguish and offering my suggestions for the betterment of South Indians, Dravidians, and Indians.

This article is not Anti-Hindi, Anti-Hindu, or Anti-North Indian; rather, it is against the imposition of Hindi supremacy across the world. As someone who has close friends from North India, I would never wish to alienate them.

Brief Aryan's History- Books like Gulamgiri by Jotiba Phule and Arya Mayai by Arignar Anna expose the cruel features of the Aryans—how they migrated to India, requested for refugee and then attacked settlements, and imposed their culture on society. They enforced Varnashrama Dharma, sacrifices, superstitions, and inequality, while branding local heroes and languages as evil. Recently, a Vaishnava acharya, Chinna Jeeyar, mocked the Telangana village goddesses Sammakka and Sarakka. As Sarvepalli Radhakrishnan once stated, Dravidian society was a civilized one, yet the Aryans labeled us 'Dasyus,' meaning evil.
Let us compare the Colonials and the present North Indian Supremacists (Aryans 2.0) and their modus operandi.

Colonials- Colonial European powers expanded from east to west. They first came as traders, begging land from local rulers . Then they brought their own men for executive positions and recruited locals for menial work. Later, they interfered in political affairs, expanded factories, and eventually usurped royal power or turned rulers into puppets. Colonizers mocked local cultures as barbaric, imposed their language, and tried to erase native tongues, leading to a cultural shift. In the end, the land appeared as if it belonged to the colonizers.

Aryans 2.0- North Indian supremacists are expanding from east to west. They arrive as laborers, traders, working professionals, or students. They may come individually or in groups. They first rent a house, then gradually move into business, bringing in their own people while assigning locals only menial jobs, at best as drivers or sales staff. Later, they fund local councilors or MLAs, support them politically, and strengthen RSS shakhas or establish new shakhas. There have even been instances of exploiting the 12-year tenancy law—where tenants who stay beyond that period can claim ownership and kicked out real owners. These supremacists mock local cultures, dismiss them as funny or indecent, impose their language, refuse to learn the local tongue, and attempt to dominate the landscape. In the end, the native land loses its glory.

North & South India- As Periyar said "we are not following race theory as Nazis but Aryans (North Indians) and Dravidians(South Indians) do have distant culture". There are many instances which are different such as Diwali in South India is celebrated as death of Narakasura and North India it is celebrated as return of Rama. Pongal in South India is celebrated for 3-4 days and in North India it is one day. South Indians do have Varalakshmi Vratham and North Indians do have Chhath Pooja. South Indian language family is different and same with North Indian. There are lot of examples for differences.

So, if any insecure diaper hyper-nationalist aggressively challenges me for calling myself a South Indian, I would respond that I have identified as South Indian—which still includes being Indian. As Ambedkar said, we are first and foremost Indians. I can proudly say I am Indian, yet my South Indian culture and political philosophy, Dravidianism, have much to contribute to society. There is no room for secession, as per Anna's words in 1962. In contrast, BJP-RSS goons acted more like secessionists by advocating the banning of the Constitution, establishing a Hindu Rashtra, and replacing Tricolor flag with the Bhagwa Flag.

Hence, that is the difference between North and South India—it is not secessionist.

Institutional Discrimination - Since independence, South Indian states and their people have faced discrimination. In national institutions and commissions, higher and key positions are mostly given to North Indians. South Indians, when included, are often from upper castes, and even then, only in select cases. Anyone can look up these commissions and see the pattern. Cabinet berths too are largely reserved for them, while positions given to others are mostly puppet roles under the top command

Budget—this is another issue for us. In the Railway Budget, northern states, which are always impoverished, such as Bihar, Uttar Pradesh, and others, get a higher share. If South India were given better rail connectivity—linking cities, towns, and villages, it would benefit students, workers, and boost overall productivity. Growing cities like Hyderabad, Kochi, Bengaluru, and Chennai must be connected to other South Indian cities and towns in South India. Yet, in railways and other budgets, South Indian states still face discrimination.

Tax share is another problem faced by South Indian states. As per the data, if Tamil Nadu pays ₹100 tax, we get back only ₹23. In a conference, former Finance Minister of Tamil Nadu, PTR, said this in the presence of Shashi Tharoor: "as a Union of India, we are happy to contribute our share to support impoverished states like Bihar, Uttar Pradesh, or those in the Northeast, but if there is no sign of development, then the tax share goes in vain". As I have argued before, if South Indian states were given higher importance, they would attract more industries, provide more employment for local people, and drive development for the state, the country, and the people as a whole. Yet, South India continues to be ignored.

Cultural Shift – Aryans from the ancient times are known to discredit the native culture as colonials and impose theirs. So, like that modern north Indian supremacists try to do the same, let us come with various examples.

In many CBSE, private, elite, and military schools, there are large numbers of North Indian students, teachers, and trustee members. When it comes to higher positions, they often go to North Indians. Some schools do not allow South Indian festivals to be celebrated, no South Indian songs or folklore are played, and no South Indian dramas are staged. The fest names usually have a Hindi touch. South Indian languages are given the least importance. Some schools even assign fines for speaking the local language, while Hindi is not an issue. I personally experienced bullying from North Indian students, who would form gangs, target weaker students, and insult them. They think themselves superior, impose their hooliganism, and insult our tones, language, and culture, trying to dominate South Indians despite living on our land.

MNCs too have discrimination, as I came to know from one of my friends. North Indians often occupy managerial or team lead roles in South Indian major cities, where they force South Indians to learn Hindi , alienate non Hindi people and implement a Hindi work environment in the office. Recently, a Noida-based consultancy even posted a job with a disclaimer stating, 'no South Indians'. As it is well known, many businesses are controlled by Marwaris, and the areas where they trade often fall under their de facto control, turning into a big syndicate (from manufacturers to traders) that sidelines local traders.

Even in community apartments in major South Indian cities, if North Indians are in the majority, they tend to dominate the rules. For instance, during Ganesh Pooja, they use Hindi mantras and songs, and apartment programs feature their songs, while South Indian culture and festivals are often sidelined.
This is how North Indian supremacists have tried to control South Indian cities. Even during my recent visit to Hyderabad, it felt as if I were in a North Indian city, with their dominance so strong that locals have started the 'Go Back Marwadi' movement. The same goes for Bengaluru; having stayed there for six months, I saw locals frustrated with the situation in the city.

Whenever these North Indians Supremacists stay longer, the cities see significant growth of RSS-BJP influence; consequently, the BJP focuses more on Coimbatore.
Worldwide, the presence of many North Indians has led to western countries rejecting visas for other innocent Indians as well. They go abroad as students or workers, then bring their spouses, have children, take citizenship and gradually establish businesses. Over time, more families follow. These supremacists often enter local politics and bring in HSS, the international wing of the RSS. Journalist CJ Werleman has exposed how the North Indian diaspora contributes to the rise of Hindutva. Their activities such as playing Garba loudly on the roads, keeping songs blaring, shouting publicly, and more, have caused such a nuisance that visa restrictions have been imposed and racism is being experienced.

Once North Indian supremacists settle in large numbers, Hindi begins to echo through the cities, their culture replaces ours, the political shift toward Hindutva grows, and locals inevitably face discrimination at every level. Even physical assaults by North Indian supremacists have occurred in Hyderabad recently, while countless insults and acts of discrimination remain unrecorded and ignored by South Indians.

What's next?- So shall we become Idi Amin and expel every North Indian? Under the Constitution that would be a serious crime ,anyone in India has the right to live and work in any part of the country.

As Aringar Anna said in Arya Mayai, the kingdoms in Dravidian land fought among themselves and weakened under Aryan masterminds. Likewise, we Tamils, Telugus, Kannadigas, and Malayalis are not united—we throw slurs at each other and try to show supremacy. Why can't we understand that we belong to one family (Proto-Dravidian), that we are brothers and sisters, and that we are divided today only because of a few pseudo-politicians? LET US BE UNITED

Let us rise together in trade, work, and studies. Let us tear down the walls of language, caste, and religion that divide us. We are Dravidians, we are South Indians—that is our identity, nothing else! A Bihari stands with a Rajasthani in their common Hindi, yet a Telugu fails to stand with a Tamil because of poisonous ego. Let us crush this divisiveness. From this moment on, there are no Hindus, Muslims,

Christians, Dalits, Iyengars, Nairs, Mudaliars, Naidus, Gowdas, Lingayats, or any other labels among us. There is only one name—DRAVIDIAN and then, INDIAN.

As there was one revolution called Rose Revolution in Georgia, we have to convey the same the North Indians and convince them to learn local languages and respect local cultures. As our Aringar Anna said in his first speech in the Rajya Sabha, a man is for man, and there is no need to be antagonistic toward others.

Let us learn our history and another South Indian language for better communication. Let us, as South Indians, stop infighting and unite against Hindi supremacy, not against people. Let South Indians stand united in every aspect of life—work, education, business, and even in abroad. This article is a call for the moral unification of South Indians.

ஓட்டு திருட்டும் மக்களாட்சியை காக்கும் பணியும் - ஜெ.வெ.நவீன்

கடந்த 07.08.2025 அன்று புது தில்லியில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வாக்குத்திருட்டு என்ற அணுகுண்டை வீசினார். மக்களாட்சி தத்துவத்தின் அடிப்படையான "ஒருவருக்கு ஒரு ஓட்டு" என்ற உரிமை மீறப்பட்டு லட்சக்கணக்கான வாக்குகள் திருடப்படுவதாக அவர் ஒரு மாபெரும் புகாரை வீசினார்.

வாக்குத்திருட்டு என்றால் என்ன?

2024 மக்களவைத் தேர்தலில் தாங்கள் தோற்க தோற்கவே வாய்ப்பு இல்லாத பல தொகுதிகளில் தோல்வி அடைந்தது ஏன் என ஆராய்வதற்காக வாக்குப்பதிவு குறித்த சில விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் கோரியது காங்கிரஸ் கட்சி.

எல்லாமே டிஜிட்டல் மயமாகிவிட்ட இந்த காலகட்டத்தில் எலக்ட்ரானிக் வடிவில் அந்தத் தரவுகளை தராமல் வழங்காமல் இயந்திரங்களால் படித்து ஆராய முடியாத வடிவில் வழங்கியது தேர்தல் ஆணையம். 543 தொகுதி முடிவுகளையும் ஆராய்வது கடினம் என்பதால் ஒரே ஒரு மக்களைத் தொகுதியில் உள்ள ஒரே ஒரு சட்டமன்ற தொகுதியை மட்டும் தேர்ந்தெடுத்து அந்த வாக்கு விவரங்களை மட்டுமே சரி பார்ப்பது என்ற பணியைத் தொடங்கியது காங்கிரஸ் கட்சி.

அது பெங்களூர் மத்திய நாடாளுமன்ற தொகுதியில் உள்ள மகாதேவபுரா சட்டமன்ற தொகுதி ஆகும். மற்ற 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் இருபதாயிரத்திற்கும் அதிகமான வாக்குகள் முன்னிலையில் இருந்த காங்கிரஸ் இந்த ஒரு தொகுதியில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றுப் போனது. அந்த அந்த ஒரு லட்சம் வாக்குகள் ஐந்து முறைகளில் திருடப்பட்டதாக திரு ராகுல் காந்தி கூறினார்.

அவை:

இரட்டை வாக்குரிமை : ஒரே நபர் பல தொகுதிகளில் வாக்குரிமை பெற்றிருப்பது இரட்டை வாக்குரிமை
போலி முகவரிகள்: வீடு எண். 0 கதவு எண் 0 தெரு எண்.0 ஆகியவற்றில் வாக்காளர்கள் குடியிருந்தனர்
ஒரு வீடு கணிசமான வாக்குகள்: ஒரு ஒண்டுக் குடித்தன வீட்டில் என்பதுக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது
செல்லாத போட்டோ: புகைப்படமே இல்லாத அல்லது தெளிவற்ற புகைப்படம் கொண்ட வாக்காளர்கள்.
படிவம் 6 மோசடி: முதல் முறை வாக்காளர்களுக்கு வழங்கப்படும் படிவம் எண். 6ஐப் பயன்படுத்தி வயதான வாக்காளர்கள், அதுவும் முந்தைய தேர்தல்களில் வேறு தொகுதியில் வாக்களித்தவர்களைக் கூட பட்டியலில் சேர்த்தது

இப்படி பல்வேறு வகைகளில் போலி வாக்காளர்களைப் பயன்படுத்தி கூடுதல் வாக்குகளை பாஜக பெறுவதாக திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.

தேர்தல் ஆணையத்தின் பதில்

வாக்குப்பதிவு நிலையங்களில் உள்ள சிசிடிவி பதிவுகளை பார்த்தாலே இவர்கள் உண்மையிலேயே வாக்களித்தார்களா என்று கண்டு பிடித்து விட முடியும் அதுவும் AI தொழில்நுட்பம் வந்த பிறகு மனிதர்கள் துணையின்றியே இந்தக் காரியத்தை இயந்திரங்களால் எளிமையாகச் செய்து விட முடியும்.

அந்த சிசிடிவி பதிவுகளை தர முடியாது என்று தேர்தல் ஆணையம் சொல்லியதே வியப்பு என்றால் அதற்கு அவர்கள் கூறிய காரணம் அதைவிட வியப்பான ஒன்று. "பெண்கள் ஓட்டு போடும் வீடியோக்களை பொதுவெளியில் காண்பித்தால் அவர்களின் பிரைவசி பாதிக்கப்படும்" என்று கூறியது நகைப்புக்குரியது.

ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுகளை ஓட்டு மொத்தமாக மறுத்த தேர்தல் ஆணையம், அவர் அபிடவிட் தாக்கல் செய்ய வேண்டும் அல்லது மன்னிப்பு கேட்க வேண்டும் எனக் கூறியது சட்ட வல்லுனர்கள் மட்டுமல்ல, பொது மக்கள் கூட ஏற்றுக் கொள்ளவில்லை.

தற்போது இதற்கு சட்டத்தீர்வு காண முயற்சி நடைபெற்று வருகிறது. இனிவரும் தேர்தலில் அனைத்து விவரங்களையும் கணினிகள் படிக்க ஏதுவான வகையில் *(machine readable format)* வழங்க வேண்டுமென உச்சநீதிமன்றம் பீகார் SIR வழக்கில் உத்தரவிட்டுள்ளது

இனி செய்ய வேண்டியவை

ஆனால் வாக்கரசியலில் எல்லாவற்றுக்கும் நீதிமன்றங்களை மட்டுமே நாம் நம்பினால் பயனில்லை. வரும் காலங்களில் வாக்காளர் பட்டியலைக் கண்கொத்திப் பாம்பாக பார்க்க வேண்டிய கட்டாயத்தில் எதிர்க்கட்சிகள் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் ஏற்கனவே திமுக இந்த விஷயத்தில் ஒரு முன்னோடியாக செயல்பட்டு வருகின்றது. தேர்தல் அறிவிக்கப்படும் முன்பே அதன் பாக முகவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு பாகவாரியாக வாக்காளர் பதிவேடுகள் ஆராயப்படுகின்றன

பட்டியலில் எந்த புதிய வாக்காளர் பெயர் சேர்க்கப்பட்டாலும், இருக்கும் வாக்காளர் பெயர் நீக்கப்பட்டாலும் அது பாக முகவருக்கு கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்.

பட்டியலில் உள்ள பெயர்கள் அனைத்தும் வீடு வீடாகச் சென்று சரிபார்க்கப்பட வேண்டும் இவை அனைத்தும் டிஜிட்டல் முறையில் செய்யப்பட வேண்டும். பட்டியலில் எந்த சிறு பிசிறு தென்பட்டாலும் வழக்கறிஞர் அணியின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அவர்கள் மூலமாக சிக்கலுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்

சிசிடிவி பதிவுகளை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற கட்சிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி பெறும் வரை எதிர்க்கட்சியின் பூத் ஏஜெண்ட்கள் தான் கண்களாகவும் காதுகளாகவும் செயல்பட்டு ஒவ்வொரு வாக்கையும் கணக்கில் கொண்டு வர வேண்டும். வாக்குப்பதிவு முடிந்ததும் ஏற்கனவே செய்வதைப் போல படிவம் 17C ஐப் பெற்று அந்தத் தரவுகளை கணினியில் உள்ளீடு செய்ய வேண்டும்.
வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளன்று ஒவ்வொரு வாக்குப்பதிவு இயந்திரத்திலும் பதிவான சான்றுகள் வாக்குகள் படிவம் 17C யுடன் ஒப்பிட்டு கணக்கு நேர் செய்யப்பட வேண்டும்.

மேற்கூறிய எல்லாவற்றையும் திமுக பல ஆண்டுகளாகச் செய்து வருகின்றது. ஆனால் அது போதாது. இந்தியா கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளும் எல்லா மாநிலங்களிலும் இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் அதற்கான முன்னெடுப்புகளை திமுக செய்ய வேண்டும்.

சமீபத்தில் ஒரு மூத்த பத்திரிக்கையாளருடனான நேர்காணலில் முன்னாள் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் திரு.எஸ்.எம்.குரேஷி பேசுகையில் "நூறு கோடி வாக்காளர்களைக் கொண்ட ஒரு நாட்டில் வாக்காளர் பட்டியல் 100% தூய்மையாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. அதே நேரத்தில் இந்த வாக்கு திருட்டு குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என அறுதியிட்டுக் கூற முடியாது. இது நமது தேர்தல் முறையில் உள்ள பலவீனம் என்று நான் தொடர்ந்து கூறி வருகிறேன். இதை நாம் சரி செய்யும் வரை நேர்மையான தேர்தல் என்பது சாத்தியமில்லை" என்று கூறியுள்ளார்.

தேர்தல் அரசியலில் உள்ள கட்சிகள் (பாஜக தவிர) தங்கள் வேற்றுமைகளை ஓரமாக வைத்து விட்டு வாக்குத் திருட்டை ஒழிக்காவிட்டால் மக்கள் ஜனநாயகத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்து விடும் அபாயம் உள்ளது.